பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 03 புதன்கிழமை (18-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 356

# பிரேமதாசா பதவி விலக எதிரணி வற்புறுத்து!

## தளபதி கிளான்ஸி கொலையை அடுத்து எழுந்துள்ள நிலைமை

கொழும்பு, நவம்பர் 18

கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ கொலையுண்ட சம்பவத்துக்கு பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படைகளின் பிரதம தளபதி என்ற வகையில் பொறுப்பேற்று ஜனாதிபதி பிரேமதாஸா பதவி விலக வேண்டும்.

தென்னிலங்கை எதிர்க்கட்சிகள் இவ்வாறு வலியுறுத்தியிருக்கின்றன.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உட்பட பல்வேறு எதிர்க்கட்சிகள் கூட்டு அறிக்கை ஒன்றை நேற்று கொழும்பில் வெளியிட்டன.

அபிவிருத்திப் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாத அரசு, யுத்தத்தைக் காரணம் காட்டி பலவந்தமாக பதவி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தற்கொலைப்படை வீரர் காங்கேசன்துறை வாசியாம்

கொழும்பு, நவ. 18

கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோவைக் குண்டுத் தாக்குதல் மூலம் படுகொலை செய்த தற்கொலைப் படை வீரர் காங்கேசன்துறை - தையிட்டி மூர்த்தி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் லோகமோஹன் (வயது 22) என அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் —

அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலைப் படைப் போராளி என்றும் கொழும்பு பொலீஸ் குற்றப் புலனாய்வுப் பணியகம் அறிவித்தது.

இந்த நபர் வசித்து வந்ததாகக் கூறப்படும் புறக்கோட்டை மலிபன் வீதியில் உள்ள தங்கும் விடுதியை பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர் என்றும் —

குண்டுத் தாக்குதல் நடந்த தினத்துக்கு முதல் நாளும் அவர் அந்த விடுதியிலேயே தங்கியிருந்தார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

மேற்படி விடுதியின் உரிமையாளர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பருத்தித்துறையில் மீனவர் மீது சூடு

பருத்தித்துறை கடற்பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் கண்டபடி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இச்சம்பவத்தின்போது ஒரு படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நால்வரில் ஒருவர் காயமடைந்தார். அவர் பின்னர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்; ஏனைய மூவரும் நீந்திக் கரை சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## கொழும்பில் புலிகளுக்கு புகலிடம் வழங்குவோர் மீது நடவடிக்கை

கொழும்பில் தமது சொந்த நலன்களை கருதி விடுதலைப் புலிகளுக்கு புகலிடம் கொடுப்போர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அவ்வாறு விடுதலைப் புலிகளுக்குப் புகலிடம் கொடுப்போர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் அவற்றை உரிய இடங்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்தும்படி கேட்கப்படுகின்றார்கள். தகவல்கள் இரகசியமாகப் பேணப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இலங்கை வானொலி தனது சர்வதேசச் செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

## தொடர்ந்தும் விளையாட நியுஸிலாந்து அணி முடிவு

கொழும்பு, நவ. 18

நியுஸிலாந்து கிரிக்கெட் அணி ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டபடி தொடர்ந்து இலங்கையில் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் என்று அறிவிக்கப்படுகிறது.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியினர் தங்கியிருக்கும் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டல் முன்பாக கடந்த திங்கள் காலை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ கொல்லப்பட்டார் என்றும் —

அதனையடுத்து இலங்கையில் மேற்கொள்ளவிருந்த கிரிக்கெட் சுற்றுலாவை ரத்துச் செய்துவிட்டுத் தாயகம் திரும்ப நியுஸிலாந்து அணியினர் முடிவு செய்தனர் என முன்னர் செய்தி வெளியாகியதும் தெரிந்ததே.

நியுஸிலாந்து கிரிக்கெட்சபை தலைவர் திரு. பீற்றர் மக்டமற் நேற்று கொழும்புக்கு விஜயம் செய்து, தமது அணியினருடன் ஆலோசனை நடத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மணலாறில் அதிரடி! நான்கு படையினர் பலி!!

யாழ்ப்பாணம், நவ. 18

மணலாறு மாவட்டத்தில் கிலோன் தியேட்டர் இராணுவ முகாமுக்கு அண்மையில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் நான்கு காவலரண்கள் மீது நேற்று முன்தினம் இரவு 9-40 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதலில் 4 இராணுவத்தினர் உயிரிழந்தனர். அவர்களின் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

சுமார் இருபது நிமிட நேரம் நீடித்த இத்தாக்குதலை அடுத்து கொல்லப்பட்ட படையினரைத் தவிர, எஞ்சியோர் காயங்களுடன் ஓடித் தப்பினதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் மூன்று குழுக்கள் மூன்று திசைகளில் இருந்து இந்தக் காவலரண்கள் மீது ஒரே சமயத்தில் தாக்குதல் நடத்தியதாகவும் —

தாக்குதலில் நான்கு படையினர் உயிரிழந்தனர் எனவும் இலங்கை வானொலி அறிவித்தது. (உ-எ-3)

### புலிகள் கைப்பற்றியவை

யாழ்ப்பாணம், நவ. 18

மணலாறில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | ஏ. கே. எல். எம். ஜி | — 01 |
| ★ | அதற்குரிய ரம் மகஸின் | — 01 |
| ★ | அதற்குரிய லிங்குகள் | — 263 |
| ★ | ரி - 56 ரக துப்பாக்கிகள் | — 02 |
| ★ | அதற்குரிய மகஸின் | — 10 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 876 |
| ★ | ஜே. ஆர். கைக்குண்டு | — 04 |
| ★ | ஏ. கே. ஹோல்சர் | — 04 |
| ★ | இராணுவ கவச தொப்பிகள் | — 05 |
| ★ | இராணுவச் சப்பாத்து | — 1 சோடி |
| ★ | இராணுவப் பட்டி | — 01 |
| ★ | மழைக் கவசம் | — 01 |

(உ-எ)

### இருவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 18

மணலாறில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரமரணமடைந்தனர்.

லெப்டினன்ட் கதிகாலன் (ஆறுமுகம் சாந்தகுமார் - சேமமடு, வவுனியா), அன்னாத்துரை (சரவணமுத்து நாகேந்திரன் - முள்ளைத்தீவு) ஆகியோர் வீரமரணமடைந்தவர்கள். (உ-எ)

## குண்டு வெடித்ததும் கடற்படை தளபதியின் கார் வானை நோக்கிப் பறந்தது

கொழும்பு, நவ. 18

"ஸ்ரீலங்கா கடற்படைத் தளபதி பயணம் செய்த கார் வானை நோக்கிப் பறந்து பின்னர் தலைகீழாக விழுந்தது."

கொழும்பு காலி முக வீதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த தற்கொலைப் படை வீரர் தமது மோட்டார் சைக்கிளை கடற்படைத் தளபதியின் காருடன் மோதவிட்டார் என்றும் —

தளபதியின் காரில் இருந்து இரு அடி தூரத்தில் வைத்து — மோட்டார் சைக்கிளை ஓடியபடியே — சக்தி வாய்ந்த குண்டை வெடிக்க வைத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## புலிகள் ஆதரவாளர் 19 பேர் வேலூரில் தப்பினராம்!

சென்னை, நவ. 18

வேலூரில் உள்ள பொலீஸ் ஆள்திரட்டும் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 19 விடுதலைப் புலிகள் இயக்க அனுதாபிகள் அந்த முகாமில் இருந்து கடந்த திங்கள் இரவு தப்பிச் சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தப்பிச் சென்றவர்களில் ஐந்து பேர் பின்னர் குடியாத்தம் என்னும் இடத்தில் வீடு ஒன்றில் இருந்த போது கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த திங்கள் இரவு மின்சார விநியோகம் தடைப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட இருளில், நீண்ட கயிறு ஒன்றைப் பயன்படுத்தி இந்த 19 பேரும் சுவரேறித் தப்பிச் சென்றனர் என்று மாநில உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-எ)

பரம்பரை தந்த பயன்தரு மரங்கள்
மாண்புடனே வாழ்த்தி வளர்த்திடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குமண' வருவது தாமதமாகும்

யாழ்ப்பாணம், நவ. 18

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் 'குமாரி' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் பாதிக்கப்பட்டதால், "குமண" கப்பல் கொழும்பில் இருந்து பருத்தித்துறைக்கு வருவது தாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடல் கொந்தளிப்பு, காற்று ஆகிய காரணங்களாலும்—

பொருள்கள் ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடும் 'பாஜ்'களில் இரண்டு பழுதடைந்ததாலும்—

'குமாரி' கப்பலில் இருந்து மா மற்றும் பொருள்களை இறக்கும் வேலைகள் மந்தகதியிலேயே நடைபெறுகின்றன.

இதனால் எதிர்வரும் 20 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட 'குமண' கப்பல் தாமதமாக — 24 ஆம் திகதி அளவில்— வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## 3 ஆம் வருட விஞ்ஞான பீட மாணவர்களுக்கு

யாழ் பல்கலைக்கழக 3 ஆம் வருட விஞ்ஞான பீட மாணவர்கள் 20-11-92 (வெள்ளி) மாலை 4 00 மணிக்கு வளாகத்தில் கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

— 3 ஆம் வருட மாணவர்கள்.

[23395]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 05 — 1950

மறைவு: 19 — 10 — 92

திதி: 18 — 11 — 92



திருமதி
### செல்வராஜா அன்னலக்ஷ்மி

என் வாழ்வின் ஒளி விளக்கே!
எமை விட்டு எங்கு சென்றாய்?
முன் செய்த தவப்பயனால்
முதல்வன் பாதம் அடைந்தவளே!

நமக்காக வாழ்ந்து தொழிலில் புகழ்பெற்று, கடமையில் கண்ணியமாகவும் வாழ்ந்தாய், உன் நினைவு எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாது.

உன் ஆத்மா சாந்தியடைய அன்னை ஸ்ரீ காமாக்ஷி அம்பிகையை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்
உங்கள் பிரிவால் துயருறும்
அன்புக் கணவர் வி. செல்வராஜாவும்,
பிள்ளைகளும்,
அன்புச் சகோதரர்களும்,
உற்றார், உறவினர்களும்.

77/1 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

[23309]

ஓம் சாயிராம்

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 20 — 08 — 1971

உதிர்வு: 05 — 10 — 1992



### அமரர் குமாரசாமி இராஜேஸ்வரன்

(உரிமையாளர் - சிவாஸ் கிறீம் ஹவுஸ்)

எமது உள்ளத்தால் இரண்டறப்பிணைந்த ஆத்ம நேசனே......... நாம் செழிப்புடன் வாழப் பயன் கருதாது உழைத்து ஓய்ந்தவனே......... உன் சாந்தப் புன்னகை அம்மாவின் நெஞ்சிலே ஆறுதல் தரவும் உன் ஆத்மா சாந்தி பெறவும் சாயீஸ்வரனே துணை.

அம்மா, அண்ணன்மார், அண்ணிமார்,
பெறாமக்கள் அயலவர்.

கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு.

[23307]

# காணி சம்பந்தமான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ 18

நில அளவை, நிலவரைபடம், நில அளவைப் பயிற்சி, காணிப்பிரச்சினைகள், காணிச்சட்டங்கள், காணி நிர்வாகம், காணிப் பதிவு இவற்றுடன் சம்பந்தப்பட்டதாக ஒரு கலந்துரையாடல் ஒன்றை நில அளவையாளர் ஒழுங்கு இணைப்புக் கழகத்தினர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 2-00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியிலுள்ள குமாரசாமி மண்டபத்தில் நடத்த உள்ளனர்.

காணி நிர்வாகம், 'காணி உறுதி பரிமாற்றங்களின் போது அக்காணிக்குரிய நில அளவைப் படம் கட்டாயம் இருக்க வேண்டும்,' நில அளவைத் துறையைக் கம்பியூட்டர் மயப்படுத்துவதனால் உள்ள நன்மைகள், காணி விடயங்களைத் தற்காலிக நடைமுறைக்கு ஏற்றவாறு புனரமைத்தல், நில, நீர், வான் அளவைகளில் நவீன விஞ்ஞானத்தைப் பிரயோகித்தல், காணிப் பிரச்சினைகளில் காவல்துறையினரின் பங்கு, நில அபிவிருத்தியும் நிலத்தின் பயன்பாடும், 'நிலமின்றேல் நாமில்லை,'— நில அளவையும் நிலவரைபடமும் பொதுமக்களுக்கு ஆற்றும் பங்கு—

போன்ற விடயங்களில் குறித்து அனுபவம் வாய்ந்த நிர்வாகத்தினர், அறிஞர்கள், அனுபவம் வாய்ந்த நில அளவையாளர்கள், சட்டத்தரணிகள் தேசத்தின் விடுதலைக்காய் உயிரை துச்சமெனக் கருதி குருதி சிந்தி மக்களைக் கவர்ந்த உண்மைத் தொண்டர்கள் பலரும் கருத்துரை வழங்கவுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

மேற்படி நிகழ்ச்சிக்கு யாழ். விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வன் தலைமை வகிப்பார். [ஒ]

## காணவில்லை



### முத்துக்குமாரு தருமலிங்கம்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தற்சமயம் 69, B. A தம்பி லேன் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய முத்துக்குமாரு தருமலிங்கம் என்பவர் 3 - 11 - 92 இல் காணாமல் போய்விட்டார். இவர் வயது 37, 5' 4'' உயரமும் பொது நிறமும் உடையவர். பச்சை கறுப்பு நிறச்சாறமும் பிறவுன் சேட்டும் அணிந்து பச்சை நிற சைக்கிளில் சென்றார். இவர் ஒரு நரம்பு தளர்ச்சி நோயாளியுமாவார். இவரைக் கண்டவர்கள் மேற்படி முகவரியில் உள்ள அவரது தாயார் மு. இரத்தினம் (சற்குணம்) என்பவருக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
மு. இரத்தினம்
[23306]

# எழுச்சி வார நிகழ்ச்சிகள்

மாவீரர் எழுச்சி வாரத்தின் நான்காம் நாளான இன்று புதன்கிழமை கருத்தரங்குகளும், சிரமதானப் பணிகளும், கலைநிகழ்ச்சிகளும் கோட்டரீதியாக வட்டவைப் பிரிவுகளில் நடைபெறவுள்ளன.

கருத்தரங்குகள் வழமை போல மாலை வேளையில் வெவ்வேறு நேரங்களில் இடம்பெறும். விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் தலைமை உரைகளும், எழுச்சி உரைகளும் கருத்தரங்குகளில் இடம்பெறும்.

### கருத்தரங்குகள்

சங்கானை வட்டத்தில் சுழிபுரம் சனசமூக நிலையம், கோப்பாயில் புத்தூர் மத்திய சனசமூக நிலையம், சண்டிலிப்பாயில் நவாலி வடக்கு சனசமூக நிலையம், உடுவிலில் சாந்தரூபன் சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் —

பருத்தித்துறை வட்டத்தில் வல்வெட்டி இந்து த. க. பாடசாலை, கைதடி வட்டத்தில் வெப் அருள் சனசமூக நிலையம், கொடிகாமத்தில் கோயிலாமணி சனசமூக நிலையம், வளையில் சதாபுரம் உதயதாரகை சனசமூக நிலையம், சாவகச்சேரி வட்டத்தில் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், அரியாலை சாம்சன் முகாம் ஆகிய இடங்களிலும் கருத்தரங்குகள் நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

கடற்புலிகளின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கில் அம்பன் அ. த. க. பாடசாலையிலும், வடமராட்சி வடக்கில் பொலிகண்டி கிழக்கு மடத்தடி மற்றும் சக்கோட்டை சனசமூக நிலையத்திலும் மற்றும்—

கிளிநொச்சி பிள்ளையார் கோவிலடி ச. ச. நிலையம், செல். நிலன் ச. ச. நிலையம், செல். மேரின் ச. ச. நிலையம் ஆகிய இடங்களிலும் கருத்தரங்குகள் நடைபெறும்.

### இன்றைய சிரமதானங்கள்

பின்வரும் இடங்களில் இன்று சிரமதானங்கள் நடைபெறும்:-

அரியாலை சாம்சன் முகாம், அச்சுவேலி பஸ் நிலையம்— சந்தை, கோப்பாய் நோர்த் வீதி — குறுக்கு வீதி, தாவடி காளியம்மன் ச. ச. நிலையம், குருநகர் வீதி, பற்றிக்ஸ் வீதி, அம்பன் கிராமிய வைத்திய சாலை. [அ]

# எழுச்சி விழா

யாழ்ப்பாணம், நவ. 18

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ் - தீவக கோட்டங்கள் நடத்தும் மாவீரர் எழுச்சி விழா இன்று கண்டிக்குளி மகளிர் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

திரு. ஆ. இளயன் தலைமையில் நடைபெறும் எழுச்சி விழாவில் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. புலேந்திரன், யாழ். மாவட்டத் தளபதி திரு. வ. செல்வராசா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர்.

மாணவர்களின் நாடகம், நடனம், இசைமாலை என்பனவும் விழாவில் இடம்பெறும். [அ]

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், நவ. 18

மிட்ரவுன் றோட்டறக்ட் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும் ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகம் மோதும். [த]

# இளவாலையில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ 18

இளவாலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் போராளியான 2ஆம் லெப்டினன்ட் தம்பி அல்லது சிவானு (ஐயாத்துரை தருமலிங்கம் — எழுதுமட்டுவாழ், கிளாலி) வீரமரணமடைந்தார். [உ-3]

## சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)
சுன்னாகம்

### முக்கிய அறிவித்தல்

### கிளைக்குழுத் தேர்தல் 1992

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 28-11-1992 சனிக்கிழமை.

நேரம்:- முற்பகல் 9.00 மணி முதல் முற்பகல் 10.00 மணி வரை.

கிளைக்குழுத் தேர்தல் நடைபெறும் திகதி:- 05-12-1992 சனிக்கிழமை.

நேரம்:- முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை.

பின்வரும் கிளைகளுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் கிளைகளில் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

| மூடப்பட்ட கிளைகள் | நியமனப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கிளைகள் |
|---|---|
| 1) கிளை இல. 20-குப்பிளான் | கிளை இல. 20 ஏழாலை தெற்கு |
| 2) கிளை இல. 21 - ஏழாலை | |
| 3) கிளை இல. 22 - ஏழாலை | கிளை இல. 23 களவாவோடை |
| 4) கிளை இல. 26, திடற்புலம் | |
| 5) கிளை இல. 30 - புன்னாலைக்கட்டுவன் | கிளை இல. 19 ஈவினை |

ஏனைய கிளைகளுக்கு நியமனப்பத்திரங்கள் சம்பந்தப்பட்ட கிளை நிலையங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

பல. நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.

நா. தவநாதன்
தேர்தல் உத்தியோகத்தர்

[C/2521]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச சபை நூலகம் யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில்

# காணி சுவீகரிப்பு, பயன்பாடு; பிரதேச செயலர்கள் வசம்

யாழ்ப்பாணம், நவ. 18 யாழ் மாவட்டத்தில் காணிகள் சுவீகரிப்பு மற்றும் பயன்பாடு தொடர்பான வேலைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பிரதேச செயலர்களுக்குப் பன்முகப்படுத்தப்பட இருப்பதாக அறிய வருகின்றது.

யாழ். செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் அரச காணிகள் தொடர்பான சகல வேலைகளையும் பிரதேச செயலகங்களுக்கு கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாகாண பிரதி ஆணையாளர் திரு. அ. லைத்திலிங்கம் தெரிவித்தார்.

இக்காணிகள் தொடர்பான சட்டங்கள் குறித்து, பிரதேச செயலகங்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். செயலகத்தில் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. [த-3]

## நிவாரணம் நிறுத்தம்: நெடுந்தீவு செல்ல 78 பேர் அனுமதி கோருகின்றனர்

நெடுந்தீவு, நவ 18 நெடுந்தீவுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் தற்போது யாழ்ப்பாணத்திலும் மற்றும் இடங்களிலும் தங்கி உள்ள நெடுந்தீவு மக்களில் 78 பேர் தம்மை மீண்டும் நெடுந்தீவுக்கு அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளனர்.

இந்த 78 பேரின் பட்டியல் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் இருந்து பல்வேறு அலுவல்கள் நிமித்தம் யாழ்ப்பாணத்துக்கு வந்து 1991 செப்டம்பர் வலம்புரி இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கு திரும்பிச் செல்ல முடியாதவர்களில் இந்த 78 பேரும் அடங்குவர்.

இப்படிச் சிக்கியோரில் இந்த வருட முற்பகுதியில் 117 பேர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் நெடுந்தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஏனையோரில் 78 பேர் தற்போது நெடுந்தீவு செல்ல அனுமதி கோரி உள்ளனர்.

அதேசமயம் நெடுந்தீவு மக்களுக்கு மீண்டும் நிவாரணம் வழங்குவது தொடர்பாக யாழ் அரசாங்க அதிபருடன் கலந்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு மக்களுக்கு யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்டு வந்த நிவாரணம் சமீபத்தில் நிறுத்தப்பட்டது தெரிந்ததே. [இ-111-17]

## தளபதியின் மரணச் சடங்கு

கொழும்பு, நவ. 18 தற்கொலைப் படைத் தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்படைத் தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோவின் மரணச் சடங்குகள் நாளை வியாழக்கிழமை கனத்தைப் பொதுமயானத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

போட்டிப் பரீட்சையில் தோற்றிய

## சகல பட்டதாரிகளுக்கும் ஆசிரிய நியமனங்கள்

கொழும்பு நவ 18 பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றிய சகல பட்டதாரிகளுக்கும் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

18-10-1991இல் வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக 7 ஆயிரத்து 954 பட்டதாரிகள் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள்.

இப்பரீட்சை பெறுபேறுகளின்படி, ஆயிரம் பட்டதாரி விண்ணப்பதாரிகள் பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர்.

இப்பரீட்சைக்குத் தோற்றிய பல பட்டதாரிகள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, எஞ்சிய 6 ஆயிரத்து 954 பட்டதாரிகளுக்கும் ஆசிரிய நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பின்தங்கிய பகுதிகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்கவேண்டும் என்ற அரசின் முடிவுக்கு இணங்க இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-எ)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்.

கூறு விலை கோரல்

விற்பனைக்கு:-

(அ) வாளி: 8 அங்குல 785 வாளிகள், சமரி பூசாத நிலையிலுள்ளன:

(ஆ) துணி: வெள்ளைப் பொலியஸ்டர் (மாணவர்க் களுக்கானது)

(இ) வற்றல்: கத்தரி, பாகல், மரவெள்ளி, கோசி மிளகாய் ஆகியன.

வாங்குவதற்கு:

(ஈ) பணப் பாதுகாப்புப் பேழை (SAFE): புதியது அல்லது பழையது

விற்பனைப் பொருள்களை எமது காரியாலயத்தில் பார்வையிடலாம். ஒவ்வொன்றுக்கும் (அ: ஒன்றின் விலை, ஆ: மீற்றர் விலை, இ: கிலோ விலை, ஈ: ஒன்றின் விலை) கூறு விலையைக் குறிப்பிட்டு தனித் தனி கடிதத்தில் சீல் இட்டு, மேற்பக்கத்தில் "கூறு விலை கோரல்" என எழுதி பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ எமது காரியாலயத்தில் சேர்க்கவும். ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் 25 - 11 - 1992 (பிற்பகல் 2-00 மணி) அன்று பிற்பகல் 4-00 மணிக்கு சீல் உடைத்துப் பரிசீலனை செய்யப்படும், கூறு விலை அனுப்பியோர் இதில் பங்கு கொள்ளலாம்.

- கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
17 - 11 - 1992 (இ-3864)

# செட்டிகுளத்தில் சிங்களவரை குடியேற்ற அரசாங்கம் திட்டம்!

### புலிகளின் அதிரடிகளால் பாதிப்பு

வவுனியா, நவ. 18 வவுனியா, செட்டிகுளத்தில் — இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் — சிங்கள, முஸ்லிம் மக்களைக் குடியமர்த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதே சமயம் அங்கு குடியேற்றப்படும் சிங்களவர்களின் பாதுகாப்புக்கென — இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியுள்ள தமிழ் மக்களைப் பலாத்காரமாக குடியேற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தக் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக செட்டிகுளம் பகுதியில் எண்ணூறு வீடுகளைக் கட்டுவதற்காக அத்திவாரங்கள் போடப்பட்டுள்ளன என்றும் —

ஆனால் அப்பகுதியில் விடுதலைப் புலிகள் திடீர் திடீரென நடத்திவரும் தாக்குதல்களினால் கட்டுமான வேலைகள் அப்படியே கிடந்து பிசுபிசுத்துப் போய்க் கிடக்கின்றன என்றும் — அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் நகரில் அமைந்திருந்த முத்துமாரியம்மன் ஆலயம் தரைமட்டமாக்கப்பட்டு, அவ்விடத்தில் புதிதாக பௌத்த விகாரை ஒன்று கட்டி எழுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

செட்டிகுளம் 'கஜபாபுர' நகரமாக பெயர் மாற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஒ-97)

## திருமலை எல்லைப் புறத்தில் 216 ஊர்காவலரில் 168 பேர் கடமைக்குத் திரும்ப மறுப்பு

கொழும்பு, நவ 18 திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப்புற சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களில் காவல் பணியில் ஈடுபடுவதற்காகத் திரட்டப்பட்ட 216 ஊர்காவல் படையினரில் 48 பேர் மட்டுமே கடமைக்குச் சமுகமளித்தனர் என்றும் —

168 ஊர்காவல் படையினர் தங்கள் கடமைகளைப் பொறுப்பு ஏற்க மறுத்துவிட்டனர் என்றும் — இரேஷ் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடமைக்குத் திரும்ப மறுத்த ஊர்காவல் படையினர் ஒரு மாதத்தினுள் திரும்பி வருவார்களானால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்றும் அந்த அதிகாரி கூறினார் [உ-எ]

மாணவர்களின் அறிவுத் தேடலை வளர்க்கும் நோக்குடன்

யாழ்.பாரதி இளைஞர் அறிவியற் கழகக் கல்விப் பிரிவு

நடத்தும்

மாபெரும் பொது அறிவுப் போட்டி இல.1

சகல மாணவ மணிகளுக்கும் பயன்படக் கூடியவை,

1ஆம் பரிசு: 1,500 ரூபா பெறுமதியானது
2ஆம் பரிசு: 1,000 ரூபா பெறுமதியானது
3ஆம் பரிசு: 750 ரூபா பெறுமதியானது

மேலும் பெறுமதிமிக்க ஆறுதல் பரிசுகளும் உண்டு.

★ தமது மாணவர்களைப் பங்குபற்ற வைக்க விரும்பும் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், இளைஞர் மன்றங்கள், மாணவர்கள் ஏனைய அமைப்புக்கள் அனைவரும் வினாத்தாள்களைப் பெற நேரிலோ, தபால் மூலமோ உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

கல்விப் பிரிவு,
பாரதி இளைஞர் அறிவியற் கழகம்,
('BEYO' LEAGUE),
31/1A, பழைய பூங்கா வீதி (மொறிஸ் வீதி),
யாழ்ப்பாணம்.

முடிவு திகதி: 01 - 12 - 1992

எனினும் மாணவர்களின் நலன் கருதி 15-12-92 வரை விடைகளை அனுப்ப சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

"அறிவியலில் ஐக்கியம், சகோதரத்துவம்"

அன்பளிப்பு உதவியாளர்,

மலிவு விலையுடன், வியாபாரத் துறையில் தனித்துவத்தோடு சிறந்து விளங்கும்,

★ அமலன் ஸ்ரோர்ஸ் ★

270, தொடர்மாடி அருகாமை,
குருநகர், யாழ்ப்பாணம். (23302)

# புலிகளை வெல்வது கடினம்; உணரவைத்தவர்கள் மாவீரர்

எதிரிப் படையிலிருந்து நழுவி நழுவி ஓடுகிறார்கள் சிப்பாய்கள். எதிரியே ஏற்றுக் கொள்கிறான். 'புலிகளை வெல்வது கடினம்' உணரவைத்தவர்கள் எங்கள் மாவீரர்கள்.

எதிரி மெல்ல மெல்லப் பின்வாங்குகின்றான். உயிரினும் மேலாய் சுதந்திரத்தை வைத்தெண்ணும் வீர விடுதலைப்படை முன்னே கூலிப் படை முகம் கொடுக்க முடியாது திணறுகிறது. இந்தப் புனிதப் போர்ப்படை விதையாகிப் போன எம் மாவீரர்களின் முனைகளால் கட்டி எழுப்பப் பெற்ற மறவர் படை. இதன் முன்னே எதிரியின் கனரகப்போர்க் கருவிகளாலும் நின்றுபிடிக்க முடியவில்லை உண்மையே, எம் மாவீரர்களின் இறப்பு வெறும் அர்த்தமற்ற இழப்பல்ல வீரத்தின் உயிர்ப்பு.

இந்த மாவீரர்களின் வீழ்ச்சியில் எமது வரலாறு எழுந்து கொண்டது. சாகிலே சரித்திரம் படம் போடப்பட்டது. இந்த வீரச்சாவுகள் உயிர்ப்புள்ள ஒரு தேசிய கீதத்தை உலகுக்கு அறிமுகப் படுத்துகின்றன.

மாவீரர் தம் இறுதி மூச்சு ஒவ்வொரு தமிழீழக் குடிமகனினதும் உயிர்மூச்சாய்க் கலந்து நிற்கிறது. (வ)

மாவீரர் நாள் - 1992

மாவீரர்களே!

நீங்கள் களத்தில் மடியும் கடைசி நேரத்தில்
என்ன நினைத்தீர்?
அந்த நினைவைச் சுமக்கின்றோம்
அதனை நிச்சயம் முடிக்கின்றோம்

- தமிழீழ மாவீரர் பணிமனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய உயர்ரக அல்சேஷன் நாய்க்குட்டிகள் மற்றும் அக்காய் 'F. M.' மீற்றர் உள்ளிட்ட ரு இன் வன். ரேப்செற், ஜப்பான் பென்டியூலம் சுவர் மணிக்கூடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; இல. 48/1, முதலாம் ஒழுங்கை, (மக்ரலன் லேன்) மருத்திதுறை வீதி, யாழ்ப்பாணம்.

[23299]

### மணமக்கள் தேவையா

உங்கள் மணப் பிரச்சினையை அலைச்சல் இன்றி இலேசாகத் தீர்க்கலாம். சந்திப்பு சனி காலை. மங்கள ஏஜென்ஸி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

[23158]

### தையல்காரர் தேவை

ஆண்களின் உடுப்புகளை வெட்டித் தைக்கக்கூடிய அனுபவமுள்ள ஆண் தையல்காரர் ஒருவர் உடன் தேவை. தொடர்பு:- மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தையடி, மானிப்பாய்.

[23301]

### இலவச திருமண சேவை

35 வயது, மிருகசீரிடம், சைவ போசனம், கனிஸில் தொழில் புரிபவருக்கு ஏற்ற மணப்பெண் தேவை. விவாகம் இந்தியாவில் செய்து அழைக்கலாம்; தொடர்பு ஞாயிறு காலையில் தவிமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி,

[23287]

### சித்திரம்

1992 க. பொ. த. (சா/த) தேர்வுக்குத் தோற்றும் மாணவர் திறமைச் சித்தி பெற்றுக் கொள்ள 'சித்திரம் ஆண்டு 11' புதிய பாடத்திட்டத்திற்கமைய உருவாக்கியவர் உங்கள் அபிமான ஆசிரியர் யோகதாசன்.

[23273]

## தனியார் துறையினருக்கும் சம்பள உயர்வு?

கொழும்பு, நவ: 18

அரசாங்கம் புதிய வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ள 30 சத வீத சம்பள உயர்வு தனியார்துறை ஊழியருக்கும் அளிக்க முடியுமா என்று சம்பள நிர்ணய சபையுடன் தொழில்ஆணையாளர் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றார்.

இப்படி கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

---

தொழில்நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்.

## இறுதிப் பரீட்சைகள், கல்வி ஆண்டு - 1992

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் 1992ஆம் கல்வியாண்டு இறுதிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் 1992 - 11 - 30 ஆந் திகதிக்கு முன்னர் தங்கள் கல்வி நெறிப் பகுதித் தலைவர்களுடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அதிபர்.

தொழில்நுட்பக்கல்லூரி,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1992 - 11 - 16

(ஜ-3863)

---

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## 1993 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள்; கடைகள் என்பவற்றை 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதிக்குக் குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 1992 - 12 - 02 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேச சபைச் செயலாளரால் கேள்வி வைப்புப் பணம், கேள்விப்பத்திரப் பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் 1992 - 11 30 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து, மூலப் பிரதியை, விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 1992 - 12 - 02 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும்; கேள்விப் பத்திரங்கள் 1992 - 12 - 02 ஆம் திகதி பி. ப. 2-00 மணிக்குத் தலைமை அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும். தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரரிடம் அனுமதிக் கடிதம் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும் நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| **1. சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1. சுன்னாகம் மத்திய சந்தை | — | 100 00 | 1,000-00 | 3,00,000-00 |
| 2. சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை | 100-00 | 100 00 | 1,000-00 | 2,20,000-00 |
| 3. சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை | 100 00 | 50-00 | 500-00 | 20,000-00 |
| 4. உடுவில் களிச் சந்தை | — | 50-00 | 500 00 | 4 000-00 |
| 5. உமல், கடதாசி விற்பனை செய்யும் உரிமை | — | 15-00 | 500-00 | 1,500-00 |
| 6. கருவாட்டுக்கடை இல -3 | 60 00 | 15-00 | 100-00 | 2,200-00 |
| 7. கருவாட்டுக்கடை இல -4 | 60-00 | 15-00 | 100-00 | 5,750-00 |
| 8. கருவாட்டுக்கடை இல -5 | 60-00 | 15-00 | 100 00 | 5,610-00 |
| 9. கருவாட்டுக்கடை இல. 6 | 60-00 | 15 00 | 100-00 | 2,200-00 |
| 10. கருவாட்டுக்கடை இல.-7 | 60 00 | 15-00 | 100-00 | 2,200-00 |
| **2. உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1. மருதனார்மடம் சந்தை | — | 50-00 | 1,000-00 | 75 000-00 |
| 2. இணுவில் சந்தை | — | 50-00 | 1.000-00 | 5,000-00 |
| 3. தாவடி மாட்டிறைச்சிக்கடை | — | 25-00 | 100 00 | 8 500-00 |
| 4. தாவடி ஆட்டிறைச்சிக்கடை | — | 25-00 | 100-00 | 30,000 00 |
| 5. உடுவில் மல்வம் மாட்டிறைச்சிக் கடை | — | 25-00 | 100-00 | 33,000-00 |
| 6. உடுவில் ஆலடி மாட்டிறைச்சிக் கடை | — | 25-00 | 100-00 | 40,000-00 |
| 7. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | — | 25-00 | 100-00 | 42,000-00 |
| 8. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக் கடை | — | 25-00 | 100-00 | 8,000-00 |
| 9. இணுவில் சந்தை வெளிக் கடைகள் | | | | |
| (1) கடை இல 1, 2 | — | 25-00 | 100-00 | 800-00 |
| (2) கடை இல 8 | — | 25-00 | 100-00 | 425-00 |
| (3) கடை இல 9 | — | 25 00 | 100-00 | 425-00 |
| (4) கடை இல. 13 | — | 25-00 | 100-00 | 850-00 |
| **3. ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1. மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | — | 50-00 | 300-00 | 55,000-00 |
| 2. ஏழாலை தெற்கு சந்தை | — | 25-00 | 50-00 | 500-00 |

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம், 12-11-1992.

தனுஜா தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

(ஜ-2620)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27 | 19 |
| — | — |
| 10 | 10 |
| — | — |
| 1944 | 1992 |

திருமதி

## சின்னத்துரை புவனேஸ்வரி

இல்லறத்தைச் சுடர்விளக்காய்
பெம்மிதயப் பேரொளியாய்
நல்லறத்துக் கொருதுணையாய் நவில்
பணிவா வடிவமாய்
சொல்லுறவோர்க் கணைதுணையாய்ச்
சூழ்கடமைப் புகலிடமாய்
எல்லோரும் புகழ்ந்திடவாய் எங்கு
மறைந் தொளித்தனையோ!

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கள் அன்புள்ள:
அன்னாரின் நாயகன்,
புத்திரன், புத்திரிகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

உழுத்தம்பி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(5565)

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 30 | 10 |
| — | — |
| 07 | 11 |
| — | — |
| 1959 | 1990 |

## அமரர் க. வரதராசன்

திதி: 18 — 11 — 1992

இரண்டாண்டு உருண்டோடி மறைந்தாலும்
மாறாதையா உன் நினைவு
எமையன்று தானெடுக்க விட்டாத
வாரினான் உன்னேட்டை வாஞ்சையுடன்
பாசமுடன், நேசமுடன் எமையணைக்க மாட்டாமல்
தழுவினாய் மரணத்தை ஏக்கமுடன்
ஆனாலும் எமைப் பாவியாக்காது
தெய்வமாய் நின்றெம்மைக் காத்திடுவாய்;

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

மனைவி, பிள்ளைகள்.

எச்சாட்டி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(5578)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சந்தேகத்துடன் பார்க்க வேண்டும்

தென்னிலங்கையில் எதிர்வரும் ஏப்ரல்—மே காலப் பகுதியில் மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அந்தத் தேர்தலுக்கு முன்னர் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுவிட வேண்டும் என்பதில் அரசாங்கம் அக்கறையாக உள்ளது.

தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள், மற்றும் அரசியல் விமர்சகர்கள், அவதானிகள் இப்படி ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். தங்கள் கருத்துக்கு அவர்கள் தக்க காரணம் ஒன்றையும் முன் வைத்திருக்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு யுத்தம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் நிலையில் மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் அது எதிர்க்கட்சிகளுக்குச் சாதகமாகிவிடும். ஐக்கிய தேசியக் கட்சி இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தகுதியற்றது என்று கூறி அடுத்த தரப்பார் இலகுவில் வாக்கு வாங்கி விடுவார்கள். அதனைத் தடுப்பதற்கு வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டுள்ளது—

இனப்பிரச்சினை சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடன் உடன்பாடு காணுவதன் மூலம் மாகாணசபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு எதிராகத் தன்னிடம் உள்ள சகல வளங்களையும் பயன்படுத்தி வெற்றி அடைய அரசு திட்டமிட்டுள்ளது— என்பதே ஆய்வாளர்கள், அவதானிகள் காட்டும் காரணமாகும்.

அரசியல்வாதிகள் எப்போதுமே சந்தர்ப்பவாதிகள். தமக்கு நன்மை கிடைக்கிறதென்றால் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் கூச்சமின்றி, ஆரவாரமின்றித் தூக்கிவீச வல்லவர்கள்.

அத்தகைய ஒரு பின்னணியில் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற தனது சுயகோட்பாட்டை அரசு கைவிடும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வை நாடுவதாகக் காட்டிக் கொண்டு நடைமுறையில் இராணுவத் தீர்வையே அது கடந்த இரண்டரை வருடங்களாக முயற்சித்துப் பார்க்கிறது.

இராணுவத் தீர்வு அல்லது இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று கொண்டு தனக்குப் பிடித்த அரசியல் தீர்வு ஒன்றைத் தமிழர் மீது திணிப்பது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நிற்க முடியாத தள நிலைமை இப்போது தென்னெனத் தெரிகிறது. அதன் காரணமாக அரசு தனது சுய கோட்பாட்டை கைவிடுவதாயின் அது வரவேற்கப்பட வேண்டிய தாகும். நேர் வழி எனவும் கருதலாம்.

ஆனால், மாகாணசபைத் தேர்தலில் வெற்றி காண வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசியல் தீர்வை நாடும் அரசின் முயற்சி சந்தேகத்துடன் பார்க்கப்படவேண்டிய ஒன்று. இது விடயத்தில் தமிழர் தரப்பில் அவதானமும், முன்னெச்சரிக்கையும் அவசியம்.

தமிழர்கள் இராணுவ ரீதியில் ஸ்ரீலங்கா அரசைவிடப் பலவீனமானவர்கள் அல்லர். அவர்களை வெல்ல முடியாது என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அதனை முறியடித்துவிட வேறு தந்திரங்கள் எதனையும் அரசு செய்யலாம். அரசியல் சாணக்கியம் புரிய முயற்சிக்கலாம். இவை குறித்துத் தமிழர்கள் விழிப்பாக இருப்பது அவசியம்.

மாகாண சபைத் தேர்தலுக்காக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்றால், தமிழர் பிரச்சினைக்கும் மாகாண சபையைத்தான் தீர்வாக்கும் எண்ணமோ?

# வன்னிப் பகுதிகள் எங்கும் மாவீரர் தின நிகழ்வுகள்

## பரந்தனிலிருந்து தாண்டிக்குளம் வரை அலங்கார வளைவுகள்

மாவீரர் தினத்தையொட்டி தற்போது அனுஷ்டிக்கப்படும் எழுச்சி வார நிகழ்வுகள் வன்னி மாவட்டத்தில் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் கிராம, வட்ட, கோட்ட ரீதியாக சிரமதான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவீரர் மயானங்கள் மற்றும் வீதிகளைத் துப்புரவு செய்தல், வடிகால்களை அமைத்தல், பொது நூலகங்கள், வைத்தியசாலைகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றைத் துப்புரவு செய்தல் ஆகிய பணிகளே சிரமதான வேலைகளில் முக்கிய இடத்தை வகித்து வருகின்றன.

அதே சமயம் எதிர்வரும் 21ஆம் திகதி கிளிநொச்சியில் மாவீரர் படிப்பகம் திறந்து வைக்கப்பட உள்ளது.

இப்படிப்பகத்தில் விவசாய, விஞ்ஞான, தொழில்நுட்பவியல், சம்பந்தமான நூல்கள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கொக்காவில் இராணுவ முகாம் தகர்ப்பில் வீரமரணம் எய்திய வன்னி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் லெப். கேணல் கண்ணாடி சந்திரனின் நினைவாக சிறுவர் பூங்கா ஒன்றும் திறந்து வைக்கப்பட உள்ளது.

மாவீரர் தினத்தை முன்னிட்டு பரந்தன் சந்தியில் இருந்து வவுனியா தாண்டிக்குளம் வரையுள்ள பிரதான வீதியில் அலங்கார வளைவுகளை அமைக்கும் வேலைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன (இ-97)

## தமிழீழ மீட்பு நிதி மீளப் பெறுபவர்கள்

மாவீரர் தினத்தை ஒட்டி தமிழீழ மீட்பு நிதி செலுத்தியோரில் ஆயிரம் பேருக்கு கடன் மீளளிப்பு செய்யப்பட உள்ளது.

கடனை மீளப் பெறுவோரின் கடன் பத்திர இலக்கங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாகத் தொகுக்கப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் காரைநகர்ப் பகுதிகளிலும் கடன் மீளளிக்கப்பட உள்ள கடன் பத்திர இலக்கங்கள் திங்கட்கிழமை உதயனில் வெளிவந்தன.

வடமராட்சி கிழக்கு, கரவெட்டி, பருத்தித்துறை, கோப்பாய் உ. அ. அ. பிரிவுகளில் கடனை மீளப் பெற உள்ளோரின் கடன் பத்திர இலக்கங்கள் வருமாறு:-

### வடமராட்சி கிழக்கு

மாசி — 1992
யா/வ.கி/ 675 729

பங்குனி — 1992
யா/வ.கி/ 463 503

சித்திரை — 1992
யா/வ.கி/ 154 302

வைகாசி — 1992
யா/வ.கி/ 23 890

ஆனி — 1992
யா/வ.கி/ 358 736

ஆடி — 1992
யா/வ.கி/ 216 364

ஆவணி — 1992
யா/வ.கி/ 26 879

புரட்டாதி — 1992
யா/வ.கி/ 560 573

ஐப்பசி — 1992
யா/வ.கி/ 786 875

கார்த்திகை — 1992
யா/வ.கி/ 49 552

### கரவெட்டி

மாசி — 1992
யா/க/ 574 610 1231
1703 2432 2590
2686 4352 4518
4631

பங்குனி — 1992
யா/க/ 121 351 432
733 983 2103
3067 3951 4182
4984

சித்திரை — 1992
யா/க/ 23 303 331
460 623 1028
1784 2301 2602
2773

வைகாசி — 1992
யா/க/ 140 324 451
502 578 925
1271 1362 1390
4125

ஆனி — 1992
யா/க/ 240 357 637
1147 1694 2841
2930 3164 4181
4976

ஆடி — 1992
யா/க/ 28 99 181
245 931 1015
1447 1676 2592
4773

ஆவணி — 1992
யா/க/ 91 95 859
422 844 1151
1890 2414 3044
3270

புரட்டாதி — 1992
யா/க/ 21 250 266
517 560 601
816 2891 4819
4537

ஐப்பசி — 1992
யா/க/ 73 219 269
859 [illegible] [illegible]
3182 [illegible] [illegible]
4421

கார்த்திகை — 1992
யா/க/ 205 232 242
325 394 561
2359 4302 4603
5187

### பருத்தித்துறை

மாசி — 1992
யா/பரு/ 134 402 1534
2346 2877 3152
3264 3971

பங்குனி — 1992
யா/பரு/ 97 374 640
742 3824 4235
4278 4282

சித்திரை — 1992
யா/பரு 37 73 104
462 465 3028
3031 3450

வைகாசி — 1992
யா/பரு/ 153 256 506
913 1581 1813
2543 2939

ஆனி — 1992
யா/பரு/ 127 148 279
299 398 726
902 2968

ஆடி — 1992
யா/பரு/ 82 195 815
1269 1458 2178
2679 3103

ஆவணி — 1992
யா/பரு 35 157 457
521 671 884
976 2740

புரட்டாதி — 1992
யா/பரு/ 08 533 592
641 980 3092
3348 3983

ஐப்பசி — 1992
யா/பரு/ 59 314 389
516 1996 2985
3401 3660

கார்த்திகை — 1992
யா/பரு 103 372 593
648 699 745
748 2635

### கோப்பாய்

மாசி — 1992
யா/கோ/ 272 429 792
2072 3840 4200
4497 4537

பங்குனி — 1992
யா/கோ/ 52 54 56
425 474 678
822 1521

சித்திரை — 1992
யா/கோ/ 186 712 815
816 1209 1752
2920 3725

வைகாசி — 1992
யா/கோ/ 43 175 536
1633 2204 3236
3354 3425

ஆனி — 1992
யா/கோ/ 160 335 930
1620 2283 2519
3279 3829

ஆடி — 1992
யா/கோ/ 29 115 216
450 2665 2772
4716 5518

ஆவணி — 1992
யா/கோ/ 264 361 578
899 1005 1236
5600 6033

புரட்டாதி — 1992
யா/கோ/ 81 153 1574
1977 2625 3191
4240 5020

ஐப்பசி — 1992
யா/கோ/ 13 91 241
246 648 914
1856 2501

கார்த்திகை — 1992
யா/கோ/ [illegible] [illegible] [illegible]
984 1748 2201
3053 6348

## இன்று

யாழ்ப்பாணம், நவ 18
கொண்டாவில் சி. சி. த. க. பாடசாலை பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. இ. சிவபாதசேகரம் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு சி. வேலாயுதம் கலந்து கொள்வார்.

விடுதலைப் புலிகள் கல்விப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் உட்பட மற்றும் பலரும் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர். (இ)

★ ★ ★

தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 3-30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

பளை ஆசிரிய கலாசாலை கத்தோலிக்க மன்றம் நடத்தும் ஒளிவிழா இன்று காலை 8-30 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

குட்டிபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியில் நடைபெறும். [த-11-117]

## பாக். எதிரணியின் பேரணி; இன்று மோதல் வெடிக்கும்?

இஸ்லாமாபாத், நவ 18
பாகிஸ்தானில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று கோரி பாகிஸ்தானின் எதிர்க்கட்சிகள் இன்று இஸ்லாமாபாத்தில் கண்டனப் பேரணி ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளன.

இதனால் மோதல்கள் ஏற்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவ்வர்ச்சி நடவடிக்கைக்கான அறைகூவல் இது என்று பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப் தெரிவித்தார்.

அணிவகுப்பு ஆரம்பமாக உள்ள ராவல்பிண்டி நோக்கி ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டு கொண்டிருப்பதாகவும்— மக்கள் ஒன்று கூடியிருக்கும் இடத்தைப் பொலீஸார் ஏற்கனவே ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வாகன ஓட்டம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது; ரயில்கள் சோதனையிடப்படுகின்றன. பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்;

மாபெரும் பொதுக்கூட்டம் நடத்திவிட்டு இஸ்லாமாபாத் நோக்கி நடைப் பயணமாகச் செல்வோம்; அங்கு சென்றடைந்ததும் நாடாளுமன்றக் கட்டடத்துக்கு வெளியே அமர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தியே தீருவோம் என்று திருமதி பெனாசிர் பூட்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை—
வெளி நாட்டுப் படையெடுப்பை முறியடிப்பது போல இஸ்லாமாபாத்தில் ராணுவ முஸ்தீபு எடுக்கப்பட்டிருப்பதாகவும்—

பெனாஸிரின் கட்சித் தொண்டர்கள் குழு உள்ள இடத்தில் தண்ணீர் வெள்ளம் போல் ஓடவிடப்பட்டு, அத்திடலின் வாயில் கதவுகள் அடைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஆண்டு ஆறு வகுப்புக்கு அனுமதிப் பரீட்சை விரைவில் நடக்கும்

யாழ்ப்பாணம், நவ. 18
"கொழும்பில் தற்சமயம் வெளியாகியுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் இங்கு வந்து சேர்ந்ததும் இங்கு ஆண்டு ஆறு வகுப்புக்கான அனுமதிப் பரீட்சைகள் உடனடியாக நடத்தப்படும்."

யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு; இ. சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் கொழும்பில் வெளியாகியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என்றும் —

வடபகுதிக்குரிய பரீட்சை முடிவுகளை விமான மூலமாகவோ அல்லது வேறு வழியிலோ இங்கு எடுத்து வர முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் —

பரீட்சை முடிவுகள் வந்து சேர்ந்த பின்னர் அனுமதிப் பரீட்சை தேசிய பாடசாலைகளிலும், பிரபல்ய பாடசாலைகளிலும் நடத்தப்படும் என்றும் பிராந்திய கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அனேகமாக டிசம்பர் மாத முதல் வாரத்தில் இப்பரீட்சை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

## குழந்தைகள் தொடர்ந்து மரணம்

யாழ்ப்பாணம், நவ. 18
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இம்மாதத்தில் வயிற்றோட்ட நோயினால் நாளாந்தம் சராசரி ஒரு குழந்தை இறந்துள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்று 17 ஆம் திகதி வரை மொத்தம் 17 குழந்தைகள் இறந்துள்ளன.

எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த மாசிலாமணி செல்வநிதி என்ற 8 வயதுப் பெண் குழந்தை நேற்றும், வதிரியைச் சேர்ந்த சு. உதயகாந்தன் என்ற 9 மாத ஆண் குழந்தை திங்கட்கிழமையும் இறந்தன.

இதற்கு முன் இம்மாதத்தில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் 15 குழந்தைகள் இறந்தன. [ஆ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### தெய்வப்பிள்ளை மாணிக்கம்

[இளைப்பாறிய கட்டடத் திணைக்கள கொழும்புப் பிரதிப் பணிப்பாளரும், யாழ். கன்காணிப்புப் பொறியியலாளரும்]

பருத்தித்துறை நாகலிங்க முதலியார் வீதியைச் சேர்ந்த தெய்வப்பிள்ளை மாணிக்கம் [பொறியியலாளர்] 16ஆம் திகதி காலமானார். இவர் காலஞ்சென்ற நாகலிங்க முதலி-தெய்வப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஞானாம்பிகையின் அன்புக் கணவரும், ரதி, தெய்வேஸ்வரி [அவுஸ்திரேலியா], இந்திரா [அவுஸ்திரேலியா], தெய்வேந்திரன் [பொறியியலாளர், அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்திய கலாநிதி மயிலேறும் பெருமாள் [பருத்தித்துறை, அரசினர்வைத்தியசாலை], ராஜ்குமார் [பொறியியலாளர்], சத்தியமூர்த்தி [பொறியியலாளர்], தமயந்தி ஆகியோரின் மாமனாரும், அருண், மயூரன் [ஹாட்லிக் கல்லூரி], சிவபாலன், சுலக்சனா [அவுஸ்திரேலியா] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17ஆம் திகதி நடைபெற்றனஎன்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்

தகவல்:
வைத்திய கலாநிதி,
கே. மயிலேறும்பெருமாள்,
(மருமகன்).

நாகலிங்கமுதலியார் வீதி.
பருத்தித்துறை.
[5580]

### வீரபாகு பொன்னையா

வீரபாகு பொன்னையா 16-11-1992இல் இறைபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ராசா, துரையம்மா, மற்றும் இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜீவரெத்தினம் (கொழும்பு), இராசமலர் (மனைவி) சிதம்பரநாதன் [லயன் ஹவுஸ் மதுபான விற்பனை நிலையம், கல்வியங்காடு] சுசிலாதேவி (திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி (முன்னாள் இ.போ சபை பரிசோதகர், கோண்டாவில்), திருமதி ஜீ. இராஜலட்சுமி (கொழும்பு), திருமதி சி. நகுலமீரா, சண்முகநாதன் [கட்டடத்திணைக்களம் திருகோணமலை], ஆகியோரின் அன்பு மாமனாரும், ராதாகிருஷ்ணன் (சுவீடன்), புஷ்பலதா, பிரேமாநிதி, ரஜேந்திரம், திரு. திருமதி ரஞ்சன், வாணி [சுவீடன்], திரு. திருமதி மோகனதாஸ் இவமலர் (சுவீடன்), திரு. திருமதி விஜயதாஸ் ஜீவரத்னா (சுவீடன்), திரு. திருமதி சற்குணராசா யசோ (சுவீடன்), திரு. திருமதி சசீகரன் செல்வமலர் (சுவிட்சர்லாந்து), திரு. திருமதி ஜீவதாஸ் மாலினி (சுவீடன்), திரு. திருமதி மோகன் ஜீவரேகா (பிரான்ஸ்), ஜீவராஜ் (இந்தியா), ஜீவகௌரி (திருகோணமலை), நாகபிரபா, சித்திராரூபி, ஷாமினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்), சுதா, கவிதா, ரூபன், (திருகோணமலை), ஆகியோரின் பேரனும், கம்ஸலா, ரகுராம், தாரகா, சுதர்சன், நிரோஷன், றொடினா, அபிவர்சினி, பிரசாத், கமலதர்சினி ஆகியோரின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (17-11-92) வழுக்கையாறு மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
பொ. சிதம்பரநாதன்
(மகன்)

த; கந்தசாமி (C.T.B),
வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.
(23303)

### திருமதி பிரான்சிஸ் றோசம்மா

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் றோசம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாட்டின் பிரான்சிஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கா. செ. ச. சூசைப்பிள்ளை, கா. செ. ச. யோசப்பு, கா. செ. மாகிறெட், கா. செ. லூசியம்மா, மரியாம்பிள்ளை ஞானப்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும், மரியநாயகம் (ஜேர்மனி), பிரனிஸ்லோஸ் இராசநாயகம் (மின்சாரத் திணைக்களம், கொழும்பு), ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் வேதநாயகம் (பிரான்ஸ்), கீதபொன்கலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மில்வ் றட், வினிபிறெட், ஜெனோவா செலின் ஆகியோரின் அன்பு மாமியாரும், றெஜினோல்ட், ஜெயராஜ் மரினாசிறானி, பரினாயூட்னா அனஸ்லி, கெவ்லின், ஜான்ஸ்லி, டொறினா சாமினி, டொறின்ரன் காமினி, ஜெயந்தன், சுகந்தன், நிறோஜன், தனுஷா, சிந்துஜா, நோயல் ஆகியோரின் அன்புப் பேத்தியும், பெனோலெட்டியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 42/5, விதானையார் வீதியிலுள்ள இல்லத்தில் இருந்து இன்று (18-11-92) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
சுவேந்திரன்

42/5, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(23308)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புலிகளுக்கு உதிக்கும் தீர்வுகளை இனங்கண்டு கவனத்தில் எடுக்குக!

## நாடாளுமன்றத்தில் அஷ்ரப் கோரிக்கை

கொழும்பு நவ. 18

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு என்னென்ன தீர்வுகள் எவ்வெப்போது உதிக்கின்றன என்பது குறித்து எவரும் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை.

அவர்களுக்குத் தென்படும் தீர்வுகள் குறித்துக் கவனத்தில் கொண்டு அவற்றை இனங்காணுவது முக்கியமாகும். அவ்வாறு இனங்கான முடியாவிடில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இயலாது; யுத்தத்தில் வெற்றி காண்பதும் கடினமாகும்.

— இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

விடுதலைப் புலிகளின் யுத்த பிரகடனம் ஒரு கட்சிக்கோ அல்லது ஓர் இனத்துக்கோ எதிரானதல்ல. இது முழு நாட்டுக்கும் எதிரான யுத்தம் என்பதை அரசு உணர வேண்டும்.

பேச்சுவார்த்தைகள் முறிவதால் யுத்தத்தை தொடர்வதால் — பொருளாதாரம் மேலும் மோசமடையும். ஒரு தீர்வு கண்டேயாக வேண்டும், இதனை அரசாங்கம் உணர மறுக்கிறது;

**ஒற்றுமை தேவை**

யுத்த காலத்தில் பிழைகளைக் கண்டுகொள்ளக் கூடாது என்று எஸ். டபிள்யூ. பண்டாரநாயக்காவே கூறியுள்ளார். எமது நாட்டின் சுதந்திரத்துக்கு சகல தரப்பினரதும் ஒற்றுமையே வித்தாக அமைந்தது என்பதை ஒருவரும் மறந்துவிடக்கூடாது.

அரச படை விலகுவது தான் யுத்தம் முடிவடைவதற்கு வழி என்றால் அதனை நாம் ஏற்றுக்கொள்ளலாம். அவ்வாறு நேரின் யுத்தத்தை நிறுத்துவதற்கான வழிமுறைகளை நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து கண்டாக வேண்டும்.

தமிழர்கள் ஒரு காலத்தில் தனிநாடு கேட்டார்கள் இன்று அந்நிலை மாறிவிட்டது. அவர்கள் மாற்று யோசனைகளை முன்வைக்கிறார்கள். அவற்றை அரசு பரிசீலிக்கக்கூடாதா?

கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு தகுந்த பாதுகாப்பு இல்லை என்று கூறினோம். இதற்கான பதில் அரசிடம் இருந்து இன்னும் கிடைக்கவில்லை — என்றார்.

[அ-3]

### பிரேமதாசா..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யில் இருக்க முனைவதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா குற்றம் சாட்டினார்.

இவ்வாறு தலைபதி படுகொலையுண்ட சம்பவம் வேறு நாடு ஒன்றில் நிகழ்ந்திருந்தால் பாதுகாப்புக்குப் பொறுப்பான அரசியல் தலைவர் தமது பதவியை இராஜினாமாச் செய்திருப்பார் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான கே. பி. சில்வா தெரிவித்தார்.

ஆயுதப் படைகளின் தளபதிகளுக்கே தகுந்த பாதுகாப்பு வழங்க முடியாத அரசு பொதுமக்களைப் பாதுகாப்பது எப்படி என்று அவர் கேள்வி எழுப்பினார்.

[உ-எ-6]

### தற்கொலை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குண்டுத்தாக்குதல் நடந்த காலிமுக மத்திய வீதியில் தற்கொலைப் படை வீரரின் மோட்டார் சைக்கிள் ஓட்டும் அனுமதிப்பத்திரம் உட்பட முக்கிய தடயங்கள் கிடைத்ததை அடுத்தே இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணையில் முன்னேற்றம் காணப்பட்டது என்று பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.

தற்கொலைப்படை வீரரின் அடையாள அட்டையையும் புலன் விசாரணை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். அதில் அவரின் பெயர், விலாசம் புகைப்படம் ஆகிய விபரங்கள் இருந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் அந்த அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் உண்மையானவையா அல்லது போலியானவையா என்பது தெரியவில்லை என பி.பி.ஸி அறிவித்தது.

தற்கொலைப் படை வீரர் பயணம் செய்த மோட்டார் சைக்கிளை விற்றதாகக் கூறப்படும் கம்பஹா வாசி ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்கொலைப் படை வீரர் எனச் சந்தேகிக்கப்படும் லோகமோஹன் மற்றும் இருவருடன் கடந்த ஜூன் மாதம் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் கொழும்பு நகரை வந்தடைந்தார் என்றும்—

மற்ற இருநபர்கள் யார் என்பது இன்னும் அறியப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

[உ-எ-இ-3-6]

### தொடர்ந்தும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தினார். அதனை தொடர்ந்து இலங்கை சுற்றுப்பயணத்தை தொடருவது என்று முடிவு செய்யப்பட்டது.

[உ-எ]

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினம் தங்கம்மா

கோண்டாவில் கிழக்கு மிஷன் பாடசாலை வீதியைச் சேர்ந்த திருமதி இரத்தினம் தங்கம்மா காலமாகிவிட்டார்;

இவர் இரத்தினத்தின் அன்பு மனைவியும், தேவராசா, நகுலேஸ்வரன் (பாலன்) (சந்திரன் சலூன் கொக்குவில் மேற்கு), நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி, கௌசலாதேவி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற இராசையா, சுந்தரம் J. P., முத்துப்பிள்ளை (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறீயினி, சுபாஷினி, இளங்கோவன், துஷ்யந்தனி, சகிதா, இசைவாணி ஆகியோரின் பேர்த்தியுமாவார்;

ஈமக்கிரியை இன்று (18 - 11 - 1992) புதன் காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாலன்.

சந்திரா சலூன்,
கொக்குவில்.
[23298]

### நாகநாதி சபாரத்தினம்

[முன்னாள் Jaffna Stores உரிமையாளர், உப்புவெளி, திருமலை]

(8 ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், குளப்பிட்டிச் சந்தி நடராசா வீதி கொக்குவில் மேற்கில் வசித்தவருமாகிய நாகநாதி சபாரத்தினம் 17-11-92 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும், மதியாபரணத்தின் அன்புச் சகோதரரும், தயாபரராசா (பிரான்ஸ்), நாகேஸ்வரி, ராஜேஸ்வரி (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ப. கனகலிங்கம் (தலைவர் புங் - நயி-ப. நோ. கூ சங்கம்), திரு. மனோகரன் (கனடா), திருமதி த. தேசமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18-11-92) காலை 10.00 மணியளவில் மேற்படி இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ப. கனகலிங்கம்
[மருமகன்]

குளப்பிட்டிச் சந்தி,
நடராசா வீதி,
கொக்குவில் மேற்கு.
[23311]

### செல்லையா கணபதிப்பிள்ளை

சரசாலை தெற்கைச் சேர்ந்த செல்லையா கணபதிப்பிள்ளை காலமானார்.

இவர் இலங்கை போக்குவரத்துச் சபை (சாவகச்சேரி சாலை) கணக்குப்பகுதி லிகிதரும், காலஞ்சென்ற அ. செல்லையா, திருமதி செல்லையா பொன்னம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற செ. சபாரத்தினத்தின் அன்புச் சகோதரனும், திருமதி ச. தங்கரத்தினத்தின் மைத்துனரும்,

ஜெயரத்தினம் (விஜயன் ரான்ஸ்போட், சரசாலை), விஜயரத்தினம், யோகரத்தினம், உதயரத்தினம், சீதாரத்தினம், லலிதாரத்தினம், அற்புதரத்தினம் ஆகியோரின் சிறிய தகப்பனும்—

கெங்காதேவி, பவானந்தன், நகுலேஸ்வரன் (நவீன் ரான்ஸ்போட் - சரசாலை) ஆகியோரின் அருமை மாமனாரும், சாதுமி, சோபிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

ஈமக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்;

தகவல்:
ச. விஜயரத்தினம்
(விஜயன்)

விஜயன் ரான்ஸ்போட்,
சரசாலை
(23312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org